


தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி




மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | சனி, பிப்ரவரி 08, 2025 | இதழ் 301

## நமது நாட்டில் தேசிய வாதத்திற்கு எதிராக பிராந்திய வாதம் பற்றி எவ்வாறு விவாதம் நடைபெற முடியும்? - குடியரசு துணைத்தலைவர் கேள்வி



சென்னை, 08 பிப்ரவரி 2025: நமது நாட்டில் தேசிய வாதத்திற்கு எதிராகப் பிராந்திய வாதம் பற்றி எவ்வாறு விவாதம் நடைபெற முடியும் என்று குடியரசு துணைத்தலைவர் கேள்வி எழுப்பியுள்ளார். கர்நாடகாவின் ரானேபென்னூரில் நடைபெற்ற கலை இலக்கிய விழாவில் தொடக்கவுரை ஆற்றிய அவர், பிரிவினைவாதத்தின் வேர்களைப் பார்க்கும் போது இதில் தேசவிரோதச் சக்திகளின் கைகள் இருப்பதை நீங்கள் காணமுடியும் என்றார். பருவநிலை மாற்றத்தை விடவும் மோசமான சவால்களை நாம் இதனால் எதிர்கொண்டிருக்கிறோம் என்று குறிப்பிட எனக்குத் தயக்கமில்லை என்று கூறிய அவர், சாதி, பிராந்தியவாதம் உட்பட பல பிரிவினைவாதங்கள் உள்ளன என்றார். இத்தகைய பிரிவினைவாத சக்திகளுக்கு எதிராக அவர் எச்சரிக்கை விடுத்தார். சமீப ஆண்டுகளில் தேசவிரோத உணர்வுகளை அதிகப்படுத்த பணம் பயன்படுத்தப்படுகிறது. மற்ற நாடுகளில் நிகழாதவகையில் நீதித்துறை ஒரு கருவியாக பயன்படுத்தப்படுகிறது.

நாட்டுக்கு சவால் விடுக்கும் தேசவிரோத சக்திகள் தேசிய வாதத்திற்கும், பிராந்தியவாதத்திற்கும் இடையே மோதலை உருவாக்க முயற்சி செய்கின்றன. இதற்கு அவை தக்கபதிலடியை பெற வேண்டும் என்று குடியரசு துணைத் தலைவர் தெரிவித்தார்.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி பற்றி குறிப்பிட்ட அவர், உலகில் எங்கே முதலீடு செய்ய முடியும், எங்கே வாய்ப்புகள் கிடைக்கின்றன,

எங்கே திறமைகளை வெளிப்படுத்த முடியும் என்ற வினாக்களுக்கு விடையாக உலகின் முன்னணி நிறுவனங்களான ஐஎம்எஃப், உலக வங்கி போன்றவை இந்தியாவை எடுத்துக் காட்டுகின்றன என்றார்.

## ஆயுஷ்மான் பாரத் சுகாதாரக் கணக்குகள் - அண்மை நிலவரம்

சென்னை, 08 பிப்ரவரி 2025: தேசிய டிஜிட்டல் சுகாதாரச் சூழல் அமைப்பை உருவாக்கும் தொலைநோக்குப் பார்வையுடன் மத்திய அரசு ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கத்தைத் தொடங்கியுள்ளது. இதில் மக்களின் பங்கேற்பை உறுதி செய்வதற்காக, 14 இலக்க தனித்துவமான சுகாதார அடையாள எண் (முன்னர் சுகாதார ஐடிகள் என்று அழைக்கப்பட்டது) ஆயுஷ்மான் பாரத் சுகாதாரக் கணக்கு எண்களாக உருவாக்கப்படுகின்றன. 03.02.2025 நிலவரப்படி, 73,90,93,095 ஆயுஷ்மான் பாரத் அடையாள எண்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

நாடு முழுவதும் தகுதியுள்ள பயனாளிகளிடையே இந்தத் திட்டம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு அவர்களின் உரிமைகள் குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதற்கும், அதிகாரம் அளிப்பதற்கும் ஒரு விரிவான ஊடக மற்றும் மக்கள் தொடர்பு உத்தி பின்பற்றப்படுகிறது. இந்தத் திட்டம் பற்றிய தகவல்களைப் பரப்புவதற்கான தகவல், கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகளில் வெளிப்புற ஊடகங்கள்,

பல்வேறு ரயில் நிலையங்களில் உள்ள டிக்கெட் கவுன்டர்களில் டிஜிட்டல் காட்சி, முக்கிய பேருந்து நிலையங்களில் அறிவிப்புகள், பயணிகள் ரயில், தேசிய மற்றும் பிராந்திய பத்திரிகைச் செய்திகள், அச்சு ஊடகங்களில் தலையங்கங்கள் மற்றும் விளம்பரங்கள், வானொலி பிரச்சாரம், தூர்தர்ஷன் வழியாக பயன் பெற்றவர்களின் சான்றுகளை ஒளிபரப்புதல், குறுஞ்செய்தி மூலம் பொதுமக்களுக்கு செய்தி அனுப்புதல், பாரம்பரிய ஊடகங்கள் பயன்படுத்தல் ஆகியவை அடங்கும். மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல இணையமைச்சர் திரு பிரதாப்ராவ் ஜாதவ் இன்று மக்களவையில் எழுத்துப்பூர்வ பதிலில் இதனைத் தெரிவித்தார்.

## இந்திய கலை வரலாற்று சபையின் 32-வது அமர்வு பிப்ரவரி 8 முதல் 10 வரை நொய்டாவில் உள்ள இந்திய பாரம்பரிய நிறுவனத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

சென்னை, 08 பிப்ரவரி 2025: இந்தியக் கலை வரலாற்று சபை என்பது குவஹாத்தியை தலைமையிடமாகக் கொண்டுள்ள இந்திய கலை பாரம்பரியத்தை ஆய்வு செய்வதற்கான அகில இந்திய அமைப்பாகும். இந்த ஆண்டு, இந்திய கலை வரலாற்று சபையின் 32-வது அமர்வு, 2025 பிப்ரவரி 8 முதல் 10 வரை நொய்டாவில் உள்ள இந்திய பாரம்பரிய நிறுவனத்தால் நடத்தப்படுகிறது. இந்த அமர்வு "கலை மற்றும் கலாச்சாரத்தில் இந்தியக் காவியங்களை வழங்குதல்" என்ற கருப்பொருளில் நடத்தப்படுகிறது. இது காவியங்களை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு வகையான கலை வெளிப்பாடுகளை முன்னிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பல்வேறு வாய்மொழி, உரை மற்றும் காட்சி ஊடகங்கள் வழியாக இந்த விவரிப்புகள் இடம் பெறும். இது காவியங்களின் பன்முகத்தன்மையை எடுத்துக்காட்டுவதாக இருக்கும்

.மேலும் அவற்றின் செல்வாக்கையும், பண்டைய காலம் முதல் சமகாலம் வரையிலான பிரதிநிதித்துவத்தையும் வெளிப்படுத்தும்.

இந்த மாநாட்டை மத்திய கலாச்சாரம் மற்றும் சுற்றுலா அமைச்சரும், இந்திய பாரம்பரிய நிறுவனத்தின் வேந்தருமான திரு கஜேந்திர சிங் ஷெகாவத் தலைமை விருந்தினராகப் பங்கேற்றுத் தொடங்கி வைப்பார். நாடாளுமன்ற உறுப்பினரும், கலாச்சாரத் துறையின் முன்னாள் இணையமைச்சரும் (தனிப்பொறுப்பு), தேசிய அருங்காட்சியக நிறுவனத்தின் முன்னாள் வேந்தருமான டாக்டர் மகேஷ் சர்மா தொடக்க நிகழ்ச்சியில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இந்தியாவின் மிகப் பழமையான காவியங்களான ராமாயணமும், மகாபாரதமும், நாட்டின் கலாச்சார நெறிமுறைகளைத் தொடர்ந்து வடிவமைக்கின்றன. காலப்போக்கில், காவியங்களின் வெவ்வேறு பதிப்புகள் வெவ்வேறு மொழிகளில் உருவாக்கப்பட்டன, அவை வெவ்வேறு கலாச்சாரங்கள் மற்றும் பிராந்தியங்களின் தனித்துவமான வெளிப்பாடுகளை பிரதிபலிக்கின்றன. உள்ளூர் மாறுபாடுகளுடன் காவியங்கள் சீர்திருத்தப்படுகின்றன.

இந்த மாநாட்டில் 200-க்கும் அதிகமான சுருக்க சமர்ப்பிப்புகள் மதிப்பீட்டிற்காகப் பெறப்பட்டுள்ளன. புராணங்கள், வரலாறு, அழகியல், கலாச்சாரப் பரிமாற்றங்கள், சர்வதேச மரபுகள், நவீனத்துவ மறுவிளக்கங்கள், பிராந்திய தாக்கங்கள் போன்ற அம்சங்களை ஆராயும் கருப்பொருள் சொற்பொழிவுகளின் பன்முகத் தன்மையை இவை பிரதிபலிக்கின்றன.

## மசோதாவை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என கவர்னர் தரப்பு வாதம். மசோதா விவகாரத்தில் கவர்னர் முட்டுக்கட்டையாக இருக்க முடியாது: சுப்ரீம் கோர்ட் கருத்து

சென்னை, 08 பிப்ரவரி 2025: அனைத்து சூழ்நிலைகளிலும் மசோதாவை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்று சுப்ரீம் கோர்ட்டில் கவர்னர் தரப்பில் வாதம் நடைபெற்றது. இதற்கு மசோதா விவகாரத்தில் கவர்னர் முட்டுக்கட்டையாக இருக்க முடியாது என்று சுப்ரீம் கோர்ட் கருத்து தெரிவித்துள்ளது.

தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு கவர்னர் ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் போட்டு வருவதாகவும், தமிழகத்தின் 3 பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களின் நியமன விவகாரத்தில் கவர்னர் தலையீடு அதிகரிப்பதாகவும் கூறி தமிழக அரசு சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு உள்ளன.

இந்த வழக்குகளை நீதிபதிகள் ஜே.பி.பார்திவாலா, ஆர்.மகாதேவன் அடங்கிய அமர்வு விசாரித்து வருகிறது. கடந்த 2 நாட்களுக்கு முன்பு நடந்த விசாரணையின்போது கவர்னருக்கு சுப்ரீம் கோர்ட் சில அறிவுறுத்தல்களை கூறியிருந்தது. இதற்கிடையே நேற்று மீண்டும் விசாரணை நடைபெற்றது. அப்போது தமிழக பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர்களை நியமிப்பதில் சிக்கல் நீடித்து வருகிறது. இது தொடர்பான மசோதாக்களுக்கு 3 ஆண்டுகளாக பதில் அளிக்காதது ஏன்? என்று தமிழக கவர்னருக்கு, சுப்ரீம் கோர்ட் சரமாரியாக கேள்வி எழுப்பியது. மேலும் விசாரணை இன்றும் தொடரும் என்று சுப்ரீம் கோர்ட் தெரிவித்தது. அதன்படி, இந்த வழக்கு விசாரணை நீதிபதிகள் ஜே.பி.பார்திவாலா, ஆர்.மகாதேவன் அடங்கிய அமர்வில் இன்றும் விசாரணைக்கு வந்தது. இன்றைய விசாரணையில் கவர்னர் தரப்பில் பல்வேறு வாதங்கள் முன் வைக்கப்பட்டுள்ளது. அதில், கவர்னர் எல்லா சூழ்நிலைகளிலும் மசோதாக்களுக்கு ஒப்புதல் தர வேண்டும் என்ற அவசியம் இல்லை. கவர்னருக்கு 4 முக்கிய அதிகாரங்கள் உள்ளன. மசோதாக்களுக்கு ஒப்புதல் தருவது, நிறுத்தி வைப்பது, திருப்பி அனுப்புவது, அதிருப்தியை தெரிவிப்பது. தமிழக அரசின் மசோதாக்களில் இருதரப்புக்குமான சாதகமான பரிந்துரைகளை சேர்க்கவே கவர்னர் முயற்சிக்கிறார். பல்கலைக்கழக செயல்பாடு குறித்து கவர்னர் தலைமையில் துணைவேந்தர்கள் மாநாடு நடைபெற இருந்தது. அதில் கலந்து கொள்ள வேண்டாம் என்று சில துணைவேந்தர்களை அரசு அணுகியது. யு.ஜி.சி விதிகளின் கீழ் கட்டுப்பட்டு உள்ள துணைவேந்தர்கள் பொறுப்பை ஆக்கிரமிக்க மாநில அரசு முயற்சித்தது. அரசியல் காரணங்களுக்காகவே துணைவேந்தர் மசோதாவை மாநில அரசால் கொண்டு வந்தது.

கவர்னர் சில முரணான காரணங்களுக்காக ஒப்புதல் வழங்காமல் இருப்பார் என்றால், அரசு மற்றும் கவர்னர் என இரு தரப்பும் இணைந்து முடிவெடுக்க ஜனாதிபதிக்கு அனுப்பலாம். குறிப்பாக, இதன் மீது முடிவெடுக்க ஜனாதிபதிக்கு அனுப்புங்கள் என்று மாநில அரசே கவர்னரை கேட்க வைக்கலாம். எனவே, இதில் எதுவும் மாநில உரிமையை பறிப்பதாக கருத முடியாது. கவர்னர் அரசியலமைப்பு பிரிவு 200-ல் விதி 1ன் கீழ் முடிவெடுத்தே ஆகவேண்டும் என்று கூறுவது, பிரிவு 200ஐ முரணாக திரித்து கூறுவதாக ஆகும்' என்று கவர்னர் தரப்பு கூறியது.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், கடந்த 2023ம் ஆண்டு மசோதாக்கள் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட பின்னர், தற்போது வரை என்ன நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டுள்ளார்? 2 ஆண்டுகளாக மசோதாக்கள் அவரிடம் உள்ளதா? மாநில அரசுக்கும் அவருக்கும் இடையே தகவல் பரிமாற்றம் இருந்ததா?.

இதற்கு அட்டர்னி ஜெனரல் கூறுகையில் இல்லை, மசோதாக்கள் அனுப்பப்பட்ட 2 மாதங்களில் தனது முடிவை தெரிவித்து விட்டார். அதில் 7 மசோதாக்கள் மீதான ஒப்புதலை நிறுத்தி வைப்பதாக தெரிவித்துள்ளார்.

முன்னதாக நீதிபதிகள், 'கவர்னர் எதுவும் விளக்கமளிக்காமல் மசோதாவை திரும்ப அனுப்பினால், அவர் மனதில் என்ன இருக்கிறது என்பது எப்படி தெரியும்? சம்மந்தப்பட்ட மசோதாவில் என்ன மாற்றம் செய்ய வேண்டும் என்பதை அவர் தெரிவிக்கவில்லை என்றால் அரசுக்கு எப்படி தெரியும்? சம்மந்தப்பட்ட மசோதா மீது தான் ஒப்புதல் கொடுக்க முடியாது என்பதை கவர்னர் எப்படி உணர்ந்தார்?' என கேள்வி எழுப்பினர்.

"துணைவேந்தர் நியமனத்தில் தமிழ்நாடு அரசு கொண்டு வந்த நடைமுறை மத்திய சட்ட விதிமுறைகளுக்கு எதிராக உள்ளது. அவற்றுக்கு கவர்னர் எவ்வாறு ஒப்புதல் அளிப்பார்?" என கவர்னர் தரப்பு கேள்விக்கு நீதிபதிகள்,"பல்கலைக் கழக மசோதா மத்திய சட்டத்துக்கு எதிராக இருந்தால் அடுத்த நடவடிக்கை என்ன? மாநில அரசு எப்படி செயல்படும் என்று நினைக்கிறீர்கள்? கவர்னர் அரசுக்கு முட்டுக் கட்டையாக உள்ளார். மசோதா விவகாரத்தில் கவர்னர் முட்டுக்கட்டையாக இருக்க முடியாது என்று தெரிவித்தனர்.

## இந்திய கடற்படையின் முதலாவது பயிற்சிக் கப்பல்கள் அணி சிங்கப்பூரின் சாங்கி கடற்படைத் தளத்தை அடைந்தது



சென்னை, 08 பிப்ரவரி 2025: ஐஎன்எஸ் சுஜாதா, ஐஎன்எஸ் ஷார்துல், ஐசிஜிஎஸ் வீரா ஆகிய முதல் பயிற்சி அணியின் கப்பல்கள் 2025 பிப்ரவரி 06 அன்று சிங்கப்பூரின் சாங்கி கடற்படைத் தளத்தை அடைந்தன. தென்கிழக்கு ஆசியாவிற்கு இந்த அணியின் நீண்ட தூரப் பயிற்சிப் பணியின் ஒரு பகுதியாக இந்தப் பயணம் அமைந்துள்ளது. இது கடல்சார் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதிலும், பரஸ்பர புரிதலை வளர்ப்பதிலும் ஒரு முக்கிய நடவடிக்கையாகும். இந்தப் படைப் பிரிவு முன்னர் 2023 அக்டோபர் மாதத்தில் சிங்கப்பூருக்கு பயணம் செய்திருந்தது.

துறைமுகத்திற்கு வந்தடைந்த போது சிங்கப்பூருக்கான ஹைகமிஷனர் டாக்டர் ஷில்பக் அம்புலே, ஐடிஎஸ் கப்பல்களைப் பார்வையிட்டார். இந்த அணியால் மேற்கொள்ளப்படும் பயிற்சி நடவடிக்கைகள் குறித்து அவருக்கு விளக்கப்பட்டது. கடல் பயிற்சியாளர்களுடன் அவர் உரையாடினார். இந்திய பசிபிக் பிராந்தியத்தில் கடல்சார் ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் இந்தியக் கடற்படையின் முக்கிய பங்கை அவர் வலியுறுத்தினார். ஐஎன்எஸ் சுஜாதா மற்றும் ஐசிஜிஎஸ் வீரா ஆகியவற்றின் கமாண்டன்ட்களுடன் ஐடிஎஸ்-ன் மூத்த அதிகாரியும், கடல்சார் பயிற்சி மற்றும் கோட்பாட்டு பிரிவின் தளபதியுமான கர்னல் ரின்சன் சுவா ஹான் லியாட்டை சந்தித்து, பரஸ்பர நலன்கள் கொண்ட கடல்சார் பிரச்சனைகள் குறித்து விவாதித்தார்.



## ஸ்கேலர் அப்ஸ்கில்லிங் மூலம் பே பே-யின் கனவு வேலையை பெற்ற சென்னை பொறியியல் பட்டதாரி

சென்னை, 08 பிப்ரவரி 2025: சென்னையைச் சேர்ந்த திறமையான மென்பொருள் பொறியாளரும், ஸ்கேலர் அகாடமியின் முன்னாள் மாணவருமான விக்னேஷ் ராஜா.கே என்பவரின் இடைவிடாத அர்ப்பணிப்பு, திறன்சார்ந்த மேம்பாடு மற்றும் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்க வேண்டும் என்ற ஆர்வத்தினால் பேபால் இல் மூத்த மென்பொருள் பொறியாளர் பதவியைப் பெற்றுள்ளார். ஒரு சாதாரண பின்னணியில் இருந்து வந்த அவரது பெற்றோர், அவருக்கு அத்தியாவசிய கல்வி, ஆதரவு மற்றும் வழிகாட்டுதலை வழங்க பாடுபட்டனர். பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையில், அவரது வாழ்க்கை முழுவதும் பல சவால்களை எதிர்கொண்ட போதிலும், அவர் தனது திறமைகளை மேம்படுத்தவும், இலக்குகளை அடையவும் தொடர்ந்து உழைத்தார். அவரது கதை மன உறுதி, நம்பிக்கை மற்றும் பயிற்சிக்கான சரியான நிறுவனம் மூலம் உங்கள் கனவு வேலையை எவ்வாறு அடைய உதவும் என்பதை எடுத்துக்காட்டுகிறது.



விக்னேஷ் தனது குழந்தைப் பருவத்தை சென்னை தி. நகரில் (தியாகராய நகர்) கழித்தார். கோடிங் துறையில் ஈர்க்கப்பட்டு, சி மற்றும் சி++ போன்ற பாடங்களில் நன்கு கற்றுத்தேர்ந்தார். ஒரு நல்ல கல்லூரியில் பொறியியல் படிக்க விரும்பினார், ஆனால் துரதிர்ஷ்டவசமாக ஜேஇஇ மெயின் தேர்வில் தேர்ச்சி பெற முடியவில்லை. இதன் விளைவாக அவர் ஒரு டயர்-3 கல்லூரியில் கணினி அறிவியல் பொறியியலில் சேர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. 2019 ஆம் ஆண்டில், விக்னேஷ் சிறப்புப் பட்டம் பெற்றார் மற்றும் ஒரு முக்கிய ஐடி சேவைகள் நிறுவனத்தில் பணியாளராக தனது வாழ்க்கையைத் தொடங்கினார். இருப்பினும், அவர் அந்த வேலையில் திருப்தி அடையவில்லை, ஏனெனில் அவர் தனது பெரும்பாலான நேரத்தை நிறுவனத்தில் பணியாளராகச் செலவிட்டார், இது அவரது திறன்கள் அல்லது அனுபவத்தைப் பெறுவதற்கான திறனைத் தடுத்தது.

விக்னேஷ் எப்போதும் மென்பொருள் பொறியியலில் சாதிக்க வேண்டுமென்றே விரும்பினார். ஆனால், அதற்கான போதுமான திறன் இன்றி தவித்தார். திறனை மேம்படுத்துவதன் மூலம் சாதிக்க முடியும் என்பதை உணர்ந்தவர், கணினி வடிவமைப்பு திறன்களை வலுப்படுத்த தனது பயணத்தைத் தொடங்கினார்.

2022 ஆம் ஆண்டில், அவர் தனது திறன் மேம்பாட்டுப் படிப்புகளுக்கு நிதியளிப்பதற்காக அதிக ஊதியத்திற்காக மாங்க் நிறுவனத்தில் பயன்பாட்டுப் பொறியாளராக பணியை மாற்றினார். ஸ்கேலரில் பயில்வதற்கு முன்பாக, அவர் வேறு இரண்டு ஆன்லைன் கல்வி தளங்கள் மூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சியைப் பெற முயற்சித்தார், ஆனால் தரவு கட்டமைப்புகள் மற்றும் வழிமுறைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காத பாடத்திட்டத்தில் அவர் திருப்தி அடையாததால், படிப்புகளை நிறுத்தினார்.

திறன் மேம்பாட்டுக்கான அவரின் தேடலின் முடிவாக இருந்தது ஸ்கேலர். ஸ்கேலரின் நன்கு கட்டமைக்கப்பட்ட பாடத்திட்டம் அவரது திறன்களில் உள்ள இடைவெளிகளை திறம்பட நிரப்பியது மற்றும் தரவு கட்டமைப்புகள் மற்றும் வழிமுறைகளில் அவரது பயிற்சியை மேம்படுத்தியது. மென்பொருள் சார்ந்தன் திறனில் மேம்பட்ட பயிற்சியைப் பெற்றதன் காரணமாக, தற்பொழுது பேபால் நிறுவனத்தில் மென்பொருள் டெவலப்பர் பதவியைப் பெற்றுள்ளார். பாடத்திட்டத்தின் கட்டமைக்கப்பட்ட கற்றல் தொகுதிகள், நடைமுறை அணுகுமுறை மற்றும் வழிகாட்டுதல் காரணமாக இது சாத்தியமானது. ஆக, இது பயன்பாட்டு பொறியாளரிடமிருந்து அவரது கனவு மென்பொருள் டெவலப்பர் பாத்திரத்திற்கு மாறுவதற்கான நம்பிக்கையையும் திறன்களையும் அவருக்கு வழங்கியது.

ஸ்கேலரின் முன்னாள் மாணவர் விக்னேஷ் கூறுகையில், "ஸ்கேலரின் இரண்டு முக்கிய அம்சங்கள் என்னவென்றால், டிஎஸ்ஏ பாடத்திட்டம் மற்றும் தொழில் நிபுணர்களின் வழிகாட்டுதல். தொடக்கநிலையாளர்கள் முதல் அனுபவம் வாய்ந்த குறியீட்டாளர்கள் வரை அனைவருக்கும் ஏற்ற வகையில் பாடத்திட்டம் கட்டமைக்கப் பட்டுள்ளது. ஒரு இடைநிலை நிரலாளராக, தரவு கட்டமைப்பு அடிப்படையிலான சிக்கல்களுடன் நான் போராடினேன். ஸ்கேலர் எனது திறமைகளை மதிப்பிட்டு, அதே மட்டத்தில் உள்ள சகாக்களுடன் ஒரு தொகுப்பில் என்னை நியமித்தார், இதனால் நான் திறம்பட கற்றுக்கொள்ள முடிந்தது. இன்ட்யூட் மற்றும் கூகிள் போன்ற சிறந்த நிறுவனங்களின் நிபுணர்களுடன் நாங்கள் பணியாற்றினோம், அவர்கள் தங்கள் நிபுணத்துவத்தைப் பகிர்ந்து கொண்டனர் மற்றும் எங்கள் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட வழிகாட்டுதலை வழங்கும் போது சிக்கலான சிக்கல்களைத் தீர்க்க எங்களுக்கு உதவினார்கள். இந்த நிபுணர்களிடமிருந்து நூற்றுக்கணக்கான மணிநேரங்களைக் கற்றுக்கொள்வது எனக்கு நடைமுறை அறிவையும் நிஜ உலக சிக்கல் தீர்க்கும் நுண்ணறிவுகளையும் அளித்தது" என்றார். மென்பொருள் மேம்பாட்டில் வெற்றிகரமான வாழ்க்கையை நோக்கிய பயணத்தில் ஆர்வம் மற்றும் கற்றலின் முக்கியத்துவத்தையும் விக்னேஷ் வலியுறுத்துகிறார். தொழில் நுட்பத்தில் ஒரு தொழிலைத் தொடரும் எவரும் அர்த்தமுள்ள ஒன்றைக் கற்றுக் கொள்வதிலும் கட்டமைப்பதிலும் கவனம் செலுத்துமாறு அவர்அறிவுறுத்துகிறா.

## அமைந்தகரை பகுதியில் வாகனம் நிறுத்துவதில் ஏற்பட்ட தகராறில், சண்டையை தடுத்தவரை கத்தியால் தாக்கிய இருவர் கைது.

சென்னை, 08 பிப்ரவரி 2025: சென்னை, அரும்பாக்கம், என்.எஸ்.கே. நகர் 14வது தெருவில் முகமது ஹானிப், வ/71, த/பெ. முகமதுஅலி என்பவர் வசித்து வருகிறார். இவரது வீட்டின் அருகே உள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பின் தரைத் தளத்தில் கறிக்கடையும் மேல்தளத்தில் உள்ள வீட்டில் கண்ணன் மற்றும் அவரது குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். முகமது ஹானிப் 05.02.2025 அன்று இரவு, தனது வீட்டினருகே அருகே நடந்து சென்று கொண்டிருந்த போது, கறிக்கடை உரிமையாளர் முகமது இப்ராஹிம் என்பவரை வாகனம் நிறுத்துவதில் ஏற்பட்ட தகராறு காரணமாக கண்ணன் மற்றும் அவரது மகன் பிரசாந்த் ஆகிய இருவரும் சேர்ந்து கையால் தாக்கி, தகராறு செய்து கொண்டிருந்தனர்.

மேலும் பிரசாந்த் என்பவர் மேற்படி கறிக்கடை உரிமையாளரை கத்தியால் குத்த முற்பட்டபோது, அதை தடுக்க சென்ற முகமது ஹானிப் என்பவர் மீது பட்டு, அவருக்கு இரத்த காயம் ஏற்பட்டது. இரத்த காயமடைந்த முகமது ஹானிப், கேஎம்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில், மேற்படி சம்பவம் குறித்து புகார் கொடுத்ததின் பேரில், கே-3 அமைந்தகரை காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். கே-3 அமைந்தகரை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படையினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற வழக்கில் சம்மந்தப்பட்ட 1.கண்ணண், வ/52, த/பெ. வெங்கடாச்சலம், 14வது தெரு, என்.எஸ்.கே. நகர், அரும்பாக்கம், சென்னை மற்றும் அவரது மகன், 2.பிரசாந்த், வ/25, த/பெ.கண்ணன் ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து குற்றச் செயலுக்கு பயன்படுத்திய 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் 06.02.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

## 2018ம் ஆண்டு கார் மோதி வாகனத்தில் பயணித்த லோடு மேன் இறந்த விபத்து வழக்கில் குடிபோதையில் விபத்தை ஏற்படுத்திய தனியார் நிறுவன பொறியாளருக்கு 5 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை மற்றும் ரூ. 15,000/- அபராதம் விதித்து நீதிமன்றம் தீர்ப்பு.

சென்னை, 08 பிப்ரவரி 2025: சென்னை, பல்லாவரம், ஈஸ்வரி நகர், எண்.57 என்ற முகவரியில் வசிதுது வரும் இருதயநாதன், வ/48, த/பெ.வாசு என்பவர் டாடா ஏஸ் வாகனம் ஓட்டி வருகிறார். கடந்த 31.12.2018 அன்று இருதயநாதன் ஆட்டோவில் லோடுமேன் பாஸ்கர், வ/51, த/பெ.வெங்கடேசன், துறைமுகம், சென்னை மற்றும் மோகன்ஆகிய இருவரை ஏற்றிக்கொண்டு ராஜீவ்காந்தி சாலையில் கிண்டி நோக்கி சென்று கொண்டிருந்த போது, சிபிதி பாலிடெக்னிலிருந்து அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்த கார் மேற்படி டாடா ஏஸ் வாகனத்தின் பின்புறம் இடித்ததில் டாடா ஏஸ் வாகனம் நிலைதடுமாறி மரத்தில் மோதி தலைகுப்புற

கவிழ்ந்ததில் படுகாயமடைந்த லோடுமேன் பாஸ்கர் சம்பவயிடத்திலேயே இறந்து விட்டார். இது குறித்து அடையார் போக்குவரத்து புலனாய்வு பிரிவில் ஐபிசி மற்றும் மோட்டார் வாகன சட்டப்பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து விசாரணை செய்ததில், கார் ஓட்டுநர் ஸ்ரீகாந்த் பாரி, வ/24, த/பெ. வெங்கடேஷ்பாரி, 4வது தெரு, தரமணி, சென்னை என்பவர் குடிபோதையில் காரை இயக்கி விபத்து ஏற்படுத்தியது தெரிய வந்ததின் பேரில் ஸ்ரீகாந்த் பாரியை கைது செய்து சிறையில் அடைத்தனர். ஸ்ரீகாந்த் பாரி தனியார் நிறுவனத்தில் பொறியாளராக வேலை செய்து வருவது தெரிய வந்தது. இவ்வழக்கு, போக்குவரத்து புலனாய்வு காவல்துறையினரால் முறையாக விசாரிக்கப்பட்டு, இறுதி அறிக்கை தயார் செய்து, உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள 1வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் தொடர்ச்சியாக சாட்சிகள் ஆஜர்படுத்தப்பட்டும், தடயங்கள் சேகரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டு இறுதி தீர்ப்பு 05.02.2025 அன்று 'ழங்கப்பட்டது. மேற்படி வழக்கில் எதிரி ஸ்ரீகாந்த் பாரி மீது குற்றம் நிரூபிக்கப் பட்டதால், மேற்படி குற்றவாளிக்கு 5 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ.15,000/- அபராதம் விதித்து கனம் நீதிபதி அவர்கள் தீர்ப்பு வழங்கினார்கள்,

மேற்படி வழக்கில் சிறப்பாக புலனாய்வு செய்து, நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி குற்றவாளிக்கு தண்டனை பெற்று தந்த அடையார் போக்குவரத்து புலனாய்வு பிரிவு காவல் நிலைய ஆய்வாளர் மற்றும் நீதிமன்ற அலுவல் பணிபுரியும் காவல் ஆளிநர்களை, காவல் உயரதிகாரிகள் வெகுவாகப் பாராட்டினர்.

## திருவொற்றியூர் பகுதியில் பிரிந்து வாழ்ந்த மனைவியின் சித்தியை கொலை செய்த நபர் கைது.

சென்னை, 08 பிப்ரவரி 2025:சென்னை, திருவொற்றியூர், வசந்த் நகர் 1வது தெரு, எண்.41/43 என்ற முகவரியில் தனலட்சுமி, வ/45, க/பெ.செல்வகுமார் என்பவர் வசித்து வந்தார். திருவொற்றியூர், அய்யாபிள்ளை தோட்டம் பகுதியில் வசித்து வரும் தனலட்சுமியின் அக்கா மகள் தமிழ்செல்வி என்பவரை திருப்பூர் மாவட்டத்தைச்சேர்ந்த காளிமுத்து என்பவர் காதலித்து கடந்த ஆண்டு திருமணம் செய்துள்ளார். காளிமுத்துக்கும், தமிழ்செல்விக்கும் அடிக்கடி குடும்ப தகராறு ஏற்பட்டு வந்ததால், காளிமுத்து அவரது மனைவி தமிழ்செல்வியை பிரிந்து திருப்பூரில் வசித்து வந்துள்ளார்.



காளிமுத்து மனைவியின் வீட்டிற்கு அடிக்கடி வந்து தகராறு செய்துள்ளார். இதனை தனலட்சுமி கண்டித்து வந்துள்ளார். காளிமுத்து மனைவி தமிழ்செல்வி அவருடன் சேர்ந்து வாழாமல் இருப்பதற்கு தமிழ்செல்வியின் சித்தி தனலட்சுமி தான் காரணம் என நினைத்து அடிக்கடி அவரிடமும் தகராறு செய்து சண்டை போட்டுள்ளார். இந்நிலையில் தனலட்சுமி கடந்த 05.02.2025 அன்று அதிகாலை சுமார் 5.30 மணியளவில் திருவொற்றியூர், அய்யாபிள்ளை தோட்டம், 1வது தெருவில் அவர் வீட்டு வேலை செய்து வரும் வீட்டின் அருகே நின்று கொண்டிருந்த போது, அங்கு வந்த காளிமுத்து மேற்படி தனலட்சுமியை கத்தியால் தாக்கி கொலை செய்து விட்டு அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளார். தாக்குதலில் இரத்தகாயமடைந்த தனலட்சுமி சம்பவயிடத்திலேயே இறந்து விட்டார்.

இது குறித்து கொலையுண்ட தனலட்சுமியின் கணவர் செல்வகுமார் எச்-8 திருவொற்றியூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் கொலை வழக்கு பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

எச்-8 திருவொற்றியூர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட காளிமுத்து, வ/25, த/பெ.மகாலிங்கம், கே.செட்டிப்பாளையம், தாராபுரம் ரோடு, திருப்பூர் மாவட்டம் என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 1 கத்தி பறிமுதல் செய்யப் பட்டது. கைது செய்யப்பட்ட காளிமுத்து 06.02.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

## வேப்பேரி காவல் நிலைய வழிப்பறி வழக்கில் தலைமறைவாகி, பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சரித்திர பதிவேடு குற்றவாளி கைது.

சென்னை, 08 பிப்ரவரி 2025:சென்னை பெருநகர காவல், ஜி-1 வேப்பேரி காவல் நிலையத்தில் கடந்த 03.02.2021 அன்று பெரியமேடு பகுதியைச் சேர்ந்த ஜெயக்குமார், வ/49, த/பெ.ஏழுமலை என்பவரிடம் பணம் ரூ.475/- ஐ கத்தியைக்காட்டி மிரட்டி, வழிப்பறி செய்தது தொடர்பாக எதிரி பிரேம் (எ) பிரேம்குமார், வ/26, த/பெ.கோபி, ஸ்டிரிங்கர்ஸ் ரோடு, பெரியமேடு, சென்னை என்பவரை தனிப்படை போலீசார் கைது செய்து, பணம் ரூ.475/- மற்றும் 1 கத்தி பறிமுதல் செய்து, எதிரி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார். இந்த வழக்கு தொடர்பாக நீதிமன்ற பிணை (ஜாமின்) பெற்று சென்ற எதிரி பிரேம் (எ) பிரேம்குமார், பின்பு நீதிமன்ற விசாரணைக்கு தொடர்ந்து ஆஜராகாத காரணத்தினால் கடந்த 18.08.2024 அன்று, கனம் 2வது சென்னை பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் இவர் மீது பிடியாணை (என்பிடபிள்யு) பிறப்பிக்கப்பட்டது.

மேற்படி எதிரி பிரேம் (எ) பிரேம்குமார் என்பவரை பிடிக்க ஜி-1 வேப்பேரி காவல் நிலைய தனிப்படை போலீசார் தீவிரமாக தேடி வந்த நிலையில், தனிப்படையிருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், மேற்படி பிடியாணை பிறப்பிக்கப்பட்ட மற்றும் சரித்திர பதிவேடு குற்றவாளியான பிரேம் (எ) பிரேம்குமார், வ/26, த/பெ.கோபி, ஸ்டிரிங்கர்ஸ் ரோடு, பெரியமேடு, சென்னை என்பவரை 06.02.2025 அன்று கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட எதிரி பிரேம் (எ) பிரேம்குமார் என்பவர் ஜி-1 வேப்பேரி காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதும் இவர் மீது ஏற்கனவே கொலைமுயற்சி, திருட்டு, வழிப்பறி, அடிதடி என 6 குற்ற வழக்குகள் உள்ளது. கைது செய்யப்பட்ட எதிரி பிரேம் (எ) பிரேம்குமார் விசாரணைக்குப் பின்னர் 06.02.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# எஸ்பிளனேடு பகுதியில் ஒரு நபரிடம் கத்தியைக் காட்டி மிரட்டி பணம் பறித்த 2 நபர்கள் கைது.

சென்னை, 08 ஜனவரி 2025: சென்னை, மண்ணடி, மூர்ஸ் தெருவில் வசித்து வரும் ரித்திக்குமார், வ/18, த/பெ. சுரேஷ்குமார் என்பவர் ஐ திஐ படித்து வருகிறார். இவர் 06.02.2025 அன்று அதிகாலை பிராட்வே, செம்புதாஸ் தெரு, மூக்கர் நல்ல முத்து தெரு சந்திப்பில் நடந்து சென்று கொண்டிருந்த போது, அங்கு வந்த அறிமுகமான 3 நபர்கள் மேற்படி ரித்திக்குமாரை வழிமறித்து அவதூறாக பேசி கத்தியைக் காட்டி மிரட்டி அவரிடமிருந்து ரூ. 700 பறித்துக்கொண்டு தப்பிச்சென்றுள்ளனர். இது குறித்து ரித்திக்குமார் பி-2 எஸ்பிளனேடு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

பி-2 எஸ்பிளனேடு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட 1.சந்தோஷ், வ/24, த/பெ. சங்கர், பிராட்வே, சென்னை 2.திருப்பதி, வ/19, த/பெ.ரமேஷ், நேரு நகர் 2வது தெரு, வியாசர்பாடி, சென்னை ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து ரூ.200 மற்றும் 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் விசாரணையில் கைது செய்யப்பட்ட சந்தோஷ் பி-2 எஸ்பிளனேடு காவல் நிலைய சரித்திரப் பதிவேடு குற்றவாளி என்பதும், இவர் மீது குற்ற வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது. மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்டு தலைமறைவாக உள்ள மற்றொரு குற்றவாளியை போலீசார் தீவிரமாக தேடிவருகின்றனர். கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் 06.02.2025 நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

# புளியந்தோப்பு பகுதியில் வீட்டின் முன்பு நிறுத்தி வைத்திருந்த விலையுயர்ந்த இருசக்கர வாகனத்தை திருடிச் சென்ற நபர் கைது. இருசக்கர வாகனம் மீட்பு.



சென்னை 08, பிப்ரவரி 2025: சென்னை, புளியந்தோப்பு, திரு.வி.க நகர் 7வது மெயின் தெருவில் வசித்து வரும் குல்பாம் ஷெரிப், வ/27, த/பெ.அக்பர் ஷெரிப் என்பவர் மெக்கானிக் கடை வைத்து நடத்தி வருகிறார். ஸ்ரீகாந்த் என்பவர் கடந்த 04.02.2025 அன்று மதியம் அவரது யமஹா ஆர்15 இருசக்கர வாகனத்தின் பழுதை சரிசெய்ய மேற்படி குல்பாம் ஷெரிப்பிடம் கொடுத்துள்ளார். குல்பாம் ஷெரிப் மேற்படி வாகனத்தின் பழுதை சரிசெய்துவிட்டு, 05.02.2025 இரவு, வீட்டின் வாசலில் இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு, சில மணி நேரம் கழித்து பார்த்தபோது, நிறுத்தி வைத்திருந்த இருசக்கர வாகனம் திருடு போயிருந்தது தெரியவந்தது. இது குறித்து குல்பாம் ஷெரிப், பி-1 புளியந்தோப்பு காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின் பேரில், போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

பி-1 புளியந்தோப்பு காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி இருசக்கர வாகனத்தை திருடிச் சென்ற இப்ராஹிம் கான், வ/27, த/பெ. காபூர்கான், விஓசி நகர் 8வது தெரு, புளியந்தோப்பு, சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து புகார்தாரர் வீட்டின் முன்பு நிறுத்தி வைத்திருந்த விலையுயர்ந்த யமஹா ஆர்15 இருசக்கர வாகனம் மீட்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரி இப்ராஹிம்கான் விசாரணைக்குப் பின்னர் 06.02.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

# கோத்ரெஜ் மூலதனத்தின் விரிவாக்கத்தை தமிழ்நாடு உந்துகிறது : 100% வளர்ச்சியை அடைகிறது



சென்னை 08, பிப்ரவரி 2025 கோத்ரெஜ் இண்டஸ்ட்ரீஸ் குழுமத்தின் நிதிச் சேவைப் பிரிவான கோத்ரெஜ் கேபிடல், கடந்த ஆண்டில் தமிழ்நாட்டில் 100% வளர்ச்சியை அடைந்துள்ளது. கோத்ரெஜ் கேபிட்டலின் 15,000 கோடி ரூபாய் வணிகத்தில் தெற்கு 30% க்கும் அதிகமான பங்களிப்பை வழங்குகிறது, இதில் தமிழ்நாடு 800 கோடி ரூபாய் சொத்துக்களை நிர்வகிக்கிறது (ஏயுஎம்), இது சென்னையை ஒரு முக்கியமான வளர்ச்சி சந்தையாக எடுத்துக்காட்டுகிறது.

கோத்ரெஜ் கேபிட்டலின் நீண்டகால தொலைநோக்குப் பார்வையில் தமிழ்நாடு மையமாக உள்ளது, 2026 ஆம் ஆண்டுக்குள் 30,000 கோடி ரூபாய் இருப்புநிலைக் குறிப்பை அடைவதில் மாநிலம் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிறுவனம், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (எம்எஸ்எம்இ) துறையை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தி வருகிறது, சென்னை மாநிலத்தில் நிறுவனத்தின் விரிவாக்க உத்திக்கு ஒரு முக்கிய சந்தையாக உருவெடுத்து வருகிறது. கடந்த ஆண்டில், கோத்ரெஜ் கேபிடல் சென்னையில் அதன் சேனல் கூட்டாளர்களின் வலையமைப்பை 150+ இலிருந்து 500 ஆக உயர்த்தியுள்ளது. இந்த மூலோபாய விரிவாக்கம் நிறுவனம் தமிழ்நாட்டில் பரந்த அளவிலான புதுமையான நிதி தயாரிப்புகளை வழங்க உதவியுள்ளது. இந்த தயாரிப்புகள் எம்எஸ்எம்இ-களின் தனித்துவமான தேவைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன. இது வாடிக்கையாளர் தளத்தை அதிகரிக்க வழிவகுக்கிறது, இது இப்போது கிட்டத்தட்ட 1,600 ஆக உள்ளது.

கோத்ரெஜ் கேபிடல், வணிகக் கடன், சொத்து மீதான கடன் மற்றும் உத்யோக் சொத்து மீதான கடன் போன்ற வணிகங்களுக்குப் பாதுகாப்பான மற்றும் பாதுகாப்பற்ற நிதி விருப்பங்களை வழங்குகிறது, இது பல்வேறு பிணையத் தேவைகளைக் கொண்ட வாடிக்கையாளர்களைப் பூர்த்தி செய்கிறது. எம்எஸ்எம்இ-களின் தனித்துவமான தேவைகளுக்கு ஏற்ப பரந்த அளவிலான புதுமையான சலுகைகளை வழங்குவதில் நிறுவனம் கவனம் செலுத்தியுள்ளது. சமீபத்தில் தொடங்கப்பட்ட ஃப்ளெக்ஸி ஃபண்ட்ஸ், எம்எஸ்எம்இ-கள் தங்கள் பணப்புழக்கத் தேவைகளை மிகவும் திறமையாக நிர்வகிக்க உதவும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஓவர் டிராஃப்ட் போன்ற வசதி.

கூடுதலாக, கோத்ரெஜ் கேபிடல் தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், சேலம், மதுரை மற்றும் கோயம்புத்தூரில் புதிய கிளைகளுடன் அதன் தடத்தை விரிவுபடுத்தியுள்ளது, மேலும் சென்னையில் அதன் தற்போதைய கோட்டையுடன். பால் பண்ணை சமூகத்தை ஆதரிக்க, நிறுவனம் கிரீம்லைன் டெய்ரியுடன் இணைந்து டெய்ரி ஃபார்ம் கடனையும் அறிமுகப்படுத்தியது, இது இந்தத் துறையில் பொருளாதார வளர்ச்சியை உந்துகிறது.

தற்போது, கோத்ரெஜ் கேபிடலின் மொத்த ஏயுஎம் இந்திய ரூபாய் மதிப்பில் 15,300 கோடிக்கும் அதிகமாக உள்ளது, 3,800 சேனல் கூட்டாளர்களின் நெட்வொர்க் மூலம் நாடு முழுவதும் 30,000+ கடன் கணக்குகளுக்கு சேவை செய்கிறது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் 10,000 க்கும் மேற்பட்ட கூட்டாளர்களுடன் அதன் விநியோக வலையமைப்பை விரிவுபடுத்தவும், நிதிச் சேவைத் துறையில் ஒரு முக்கிய பங்குதாரராக அதன் நிலையை வலுப்படுத்தவும் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

கோத்ரெஜ் கேபிடலின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி மணீஷ் ஷா கூறுகையில், "எம்எஸ்எம்இ துறையின் விரைவான வளர்ச்சியுடன், தமிழ்நாடு எங்களுக்கு ஒரு அத்தியாவசிய சந்தையாக உள்ளது, சென்னை எங்கள் எம்எஸ்எம்இ கடன் வணிகத்தில் முக்கிய பங்களிப்பாளராக உள்ளது. எங்கள் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட அணுகுமுறை மற்றும் புதுமையான தயாரிப்புகள் எங்கள் வெற்றிக்கு முக்கியமாக உள்ளன. மாநிலத்தில், உற்பத்தி, ஜவுளி, மின்னணுவியல் மற்றும் சேவைத் தொழில்கள் போன்ற தொழில்களில் நாங்கள் தொடர்ந்து கவனம் செலுத்துவோம்."

எதிர்காலத்தை நோக்கி, கோத்ரெஜ் கேபிடல் விரைவில் சப்ளை செயின் நிதியுதவியை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது, இது எம்எஸ்எம்இ களுக்கான நிதி உள்ளடக்கத்தை மேம்படுத்துகிறது. பரந்த வாடிக்கையாளர் தளத்தைப் பூர்த்தி செய்ய, பல்வேறு பிணைய விருப்பங்களை இலக்காகக் கொண்டு, அதன் பாதுகாப்பான மற்றும் பாதுகாப்பற்ற வணிக சலுகைகளை அளவிடுவதையும் நிறுவனம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

எம்எஸ்எம்இ உரிமையாளர்களுக்கு அவர்களின் வணிகங்களை வளர்ப்பதற்கான அனைத்தையும் உள்ளடக்கிய வாய்ப்பை வழங்குவதற்கான அதன் முதல் வகையான தளமான கோத்ரெஜ் நிர்மானுக்கான கூட்டாண்மை தளத்தை சமீபத்தில் விரிவுபடுத்தியுள்ளோம், இது எம்எஸ்எம்இ உரிமையாளர்களுக்கு அவர்களின் வணிகங்களை வளர்ப்பதற்கான அனைத்தையும் உள்ளடக்கிய வாய்ப்பை வழங்கும் ஒரு நிறுத்த வணிக தீர்வாகும். கோத்ரெஜ் நிர்மான், சந்தை வரம்பை அதிகரிக்கவும், சட்ட மற்றும் இணக்க செயல்முறைகளை எளிதாக்கவும், நிதி உதவி வழங்கவும், ஊழியர்களின் உடல்நலம் மற்றும் நலனை மேம்படுத்தவும், சிறு வணிகங்களுக்கு வணிகப் பயிற்சி அளிக்கவும், டிபிஎஸ் பேங்க் இந்தியா, விசா, அமேசான், ஹெம்டெக் பராஸ், எஸ்க்ரோபே, ஆன்சூரிட்டி மற்றும் கிரிசில் உள்ளிட்ட 16 நிறுவனங்களுடன் கூட்டு சேர்ந்துள்ளது.

# நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் - 07-02-2025 நிகழ்வுகள் - தமிழ்நாட்டு மீனவர்கள் பாதுகாப்பை வலியுறுத்தி எம்.பிக்கள் டெல்லியில் போராட்டம்



சென்னை 08, பிப்ரவரி 2025: தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ந்து இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவதும் கைது செய்யப்படுவதும் அவர்களின் படகுகள் இலங்கை அதிகாரிகளால் கைப்பற்றப்படுவதும் வாடிக்கையான நிகழ்வாகிவிட்ட நிலையில் தற்போது இலங்கை சிறையில் உள்ள தமிழ்நாட்டை சேர்ந்த 97 மீனவர்களையும் பறிமுதல் செய்யப்பட்ட 216 மீன்பிடி படகுகளையும் விடுவிக்க கோரியும், மீனவர்கள் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு வேண்டும் என்பதை வலியுறுத்தியும் மக்களவையில் இவ்விவகாரத்தை விவாதத்திற்கு எடுக்குமாறு திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி எம்.பி அவர்கள் அவையில் நேரமில்லா நேரத்தில் ஒத்திவைப்பு தீர்மானத்தை முன்வைத்தார்.

மேலும் இவ்விவகாரத்தில் மெத்தனமாக செயல்படும் ஒன்றிய அரசை கண்டித்து இன்று காலை 10:30 மணிக்கு திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கூட்டணி கட்சிகளின் தமிழ்நாடு எம்.பிக்கள் நாடாளுமன்ற வாயிலில் போராட்டம் நடத்தினார்கள். மீனவர்களை பாதுகாக்காமல் உறங்கும் ஒன்றிய அரசை கண்டித்தும் தமிழ்நாடு மீனவர்களை மீட்டுக் கொடுக்க வேண்டும் என்றும் பதாகைகளை ஏந்தி அவர்கள் முழக்கமிட்டனர்.

போராட்டத்தின் போது பத்திரிக்கையாளர்களை சந்திந்த திமுக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி எம்பி அவர்கள் பேசியதாவது: இலங்கை கடற்படை தொடர்ந்து தமிழ்நாட்டு மீனவர்களை கைது செய்வதும் துன்புறுத்துவதும் வாடிக்கையாகி விட்டது. தற்போது கூட தொண்ணூற்றி ஏழு மீனவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். எங்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமைச்சருக்கும்-பிரதமருக்கும் கடிதம் எழுதியிருக்கிறார், அவர் இங்கே வரும்போதெல்லாம் தொடர்ந்து பிரதமரிடம் மீனவர்கள் பாதுகாப்பிற்கு தீர்வு காணுமாறு வலியுறுத்தியிருக்கிறார்.

இதுவரை இருநூற்றி பத்து படகுகளை இலங்கை கடற்படையினர் எடுத்துச் சென்றுள்ளனர். படகில்லாமல் மீனவர்கள் என்ன செய்வார்கள்? எங்கள் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருக்கிறது. தற்போது தமிழ்நாட்டில் இது மிகப்பெரிய பிரச்சினை. ஒன்றிய அரசு மீனவக் குழுக்களுடன் கலந்தாய்வு செய்து பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண குழு அமைப்பதாக உறுதியளித்திருந்தது. ஆனால் அதற்கான எந்த முயற்சியும் இதுவரையில் மேற்கொள்ளப் படவில்லை.

தற்போது கைது செய்யப்பட்டிருக்கும் மீனவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். அவர்களின் படகுகளை திருப்பிக் கொடுக்க வேண்டும். எங்கள் மீனவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். ஒன்றிய அரசு உடனடியாக அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எங்கள் முதலமைச்சர் வலியுறுத்தியிருப்பதை போல் இப்பிரச்சினைக்கு ஒன்றிய அரசு இலங்கை அரசுடன் பேசி நிரந்தரத் தீர்வு காண வேண்டும்.

# சாம்சங் கேலக்ஸி எஸ் 25 சீரிஸ் இந்தியாவில் பறக்கத் தொடங்கியுள்ளது



சென்னை 08, பிப்ரவரி 2025: பிப்ரவரி 07, 2025: இந்தியாவின் மிகப் பெரிய எலக்ட்ரானிக்ஸ் நிறுவனமான சாம்சங், இந்தியாவில் அதன் முதன்மையான கேலக்ஸி எஸ்25 சீரிஸுக்கு சாதனைப் பதிலைப் பெற்றதாக இன்று கூறியது, இதன் விளைவாக 430,000 முன்கூட்டிய ஆர்டர்கள் செய்யப்பட்டன. இந்தியாவில் உள்ள கேலக்ஸி எஸ்24 தொடருடன் ஒப்பிடும்போது கேலக்ஸி எஸ்25 தொடருக்கான முன்கூட்டிய ஆர்டர்கள் 20% அதிகம்.

"கேலக்ஸி எஸ்25 அல்ட்ரா, கேலக்ஸி எஸ்25+ மற்றும் நிணீரீணீஜ்ஹ் ஷி25 ஸ்மார்ட்போன்கள் சாம்சங்கின் மிகவும் இயற்கையான மற்றும் சூழல்-விழிப்புணர்வு மொபைல் அனுபவங்களுடன் ஒரு புதிய தரநிலையை அமைத்துள்ளன. கேலக்ஸி எஸ்25 தொடருக்கான வலுவான தேவையை இளம் தொழில்நுட்ப ஆர்வலர்கள் மத்தியில் கண்டுள்ளோம். 17,000 அவுட்லெட்டுகள், இது சிறிய நகரங்களில் தேவையைத் தட்டி எழுப்ப உதவியது" என்று சாம்சங் இந்தியாவின் எம்எக்ஸ் பிரிவின் மூத்த துணைத் தலைவர் ராஜு புல்லன் கூறினார்.

கேலக்ஸி எஸ்25 தொடரின் வெற்றியானது, நுகர்வோர் தங்கள் அன்றாட வாழ்க்கையை பாதிக்கும் தடையற்ற மற்றும் உள்ளுணர்வு அல் தீர்வுகளை அதிகளவில் ஏற்றுக்கொள்வார்கள் என்ற சாம்சங்கின் நம்பிக்கையை வலுப்படுத்துகிறது. இந்தியாவில் உள்ள கேலக்ஸி எஸ்25 நுகர்வோருக்கு, கூகுள் இன் ஜெமினி லைவ் தொடக்கத்தில் இருந்தே இந்தியில் கிடைக்கும், இது சாம்சங்கிற்கு இந்தியாவின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

பிப்ரவரி 7 முதல், கேலக்ஸி எஸ்25 தொடர் சில்லறை விற்பனைக் கடைகள் மற்றும் சாம்சங்.காம் மற்றும் பிற ஆன்லைன் தளங்களில் கிடைக்கும், கேலக்ஸி எஸ்25 அல்ட்ரா ஆனது டைட்டானியம் சில்வர் ப்ளூ, டைட்டானியம் ப்ளாக், டைட்டானியம் ஒயிட் சில்வர் மற்றும் டைட்டானியம் கிரே, கேலக்ஸி எஸ்25 மற்றும் கேலக்ஸி எஸ்25+ இல் ஷாடோ, எல்எல்சிஒய் இல் கிடைக்கும்.

# துபாய் உலகின் மிகப்பெரிய நீதி, அன்பு மற்றும் அமைதி குறித்த உலகளாவிய மாநாட்டை நடத்த உள்ளது

சென்னை, 08 பிப்ரவரி 2025: உலகின் மிகப்பெரிய நீதி, அன்பு மற்றும் அமைதியை முன்னிலைப் படுத்தும் மாநாடு, 2,800க்கும் மேற்பட்ட அமைதிப் பணியாளர்களை உலகம் முழுவதும் இருந்து வரவேற்கத் தயாராக இருக்கிறது.



உலக நீதி, அன்பு மற்றும் அமைதி மாநாடு "ஒரே கிரகம், ஒரே குரல்: உலக நீதி, அன்பு மற்றும் அமைதி" என்ற தலைப்பில், ஏப்ரல் 12 மற்றும் 13, 2025 தேதிகளில் துபாய் கண்காட்சிக் மையம் (டிஇசி), துபாய் எக்ஸ்போ சிட்டியில் நடைபெற உள்ளது. "நான் அமைதிப் பணியாளர் (ஐ ஆம் பீஸ்கீப்பர் மூவ்மென்ட்)" இயக்கத்தால் ஏற்பாடு செய்யப்படும் இந்த வரலாற்று நிகழ்வில், 10 நோபல் பரிசு பெற்றவர்கள் உட்பட 72 சிறப்பு பேச்சாளர்கள் பங்கேற்கின்றனர். இதில் உலகப் புகழ்பெற்ற சிந்தனையாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், தொழில் முனைவோர்கள், கலாச்சார மற்றும் விளையாட்டு துறை சாதனையாளர்கள் மற்றும் அமைதி, நீதி ஆதரவாளர்கள் கலந்து கொள்கிறார்கள்.

இந்த உச்சி மாநாட்டில் பாலிவுட், ஆன்மீக மற்றும் மதத் தலைவர்கள், தொழில்துறை தலைவர்கள், சட்ட வல்லுநர்கள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள் மற்றும் சமூக சேவகர்கள் உட்பட இந்தியாவில் இருந்து பலரும் பங்கேற்க இருக்கிறார்கள். நோபல் பரிசு பெற்ற கைலாஷ் சத்யார்த்தி, யோகா குரு, பாபா ராம்தேவ் உள்ளிட்டோரும் இந்தியாவில் இருந்து பங்கேற்க உள்ளனர். மாண்புமிகு ஷேக் நஹயான் மபாரக் அல் நஹயான், அ.இ.அமீரக அமைச்சரவை உறுப்பினர் மற்றும் சகிப்புத்தன்மை, ஒற்றுமை அமைச்சர், மாநாட்டின் தலைமை விருந்தினராக பங்கேற்கிறார்.

உலக நீதி, அன்பு & அமைதிக்கான பார்வை: பிப்ரவரி 3, 2025, அன்று மாநாட்டின் அறிவிப்பின்போது, "நான் அமைதிப் பணியாளர்" இயக்கத்தின் தலைவர் டாக்டர் ஹுஸைஃபா கொரகிவாலா, மாநாட்டின் நோக்கத்தை வலியுறுத்தினார்.

"நீதி, அன்பு மற்றும் அமைதியை முன்னெடுக்கும் உலகளாவிய சிந்தனையாளர்களை ஒரு மேடையில் ஒன்று சேர்ப்பதே எங்கள் குறிக்கோள். 'ஒரே கிரகம், ஒரே குரல்' என்ற சக்திவாய்ந்த தலைப்பின் கீழ், இந்த வரலாற்று சிறப்பு மிக்க மாநாடு, உலகின் தலைவர்களையும் அமைதிக்காக பாடுபடும் சமூக செயற்பாட்டாளர்களையும் இணைக்கும்".

துபாய், உலக அமைதியின் சின்னமாகவும் சகிப்புத்தன்மைக்கு உதாரணமாகவும் விளங்குவதால், மாநாட்டின் தலைநகராக தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஐக்கிய அரபு எமிரேட்ஸ் "சகிப்புத்தன்மை மற்றும் மகிழ்ச்சி அமைச்சகம்" போன்ற அரசு நிறுவனங்களை நிறுவிய சில நாடுகளில் ஒன்றாக இருப்பது முக்கியமான அம்சமாகும்.

மேலும், 2025-ம் ஆண்டு ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தலைவர் மாண்புமிகு ஷேக் மொகமது பின் சாயித் அல் நஹ்யான் அவர்களால் "சமூகத்தின் ஆண்டு" என அறிவிக்கப் பட்டுள்ளதால், இது மாநாட்டுக்கு சிறந்த காலக்கட்டமாகும்.

இவ்வாண்டு முதல், ஆண்டுதோறும் துபாயில் மாநாடு நடைபெறும். உலக அமைதி மற்றும் சமத்துவத்தின் முக்கிய மையமாக துபாயை நிறுவும் முயற்சியாக இது அமையும். உலகளாவிய தாக்கத்தை கொண்டவர்களுக்கு விருதுகள்:

மாநாட்டில் "உலகளாவிய அங்கீகாரங்கள் மற்றும் விருதுகள் (குளோபல் ரிககனிஷன்ஸ் அண்ட் அவார்ட்ஸ்)" வழங்கப்பட விருக்கின்றன. நீதி, சமத்துவம், இரக்கம் மற்றும் அமைதி ஆகியவற்றில் சிறப்பான பங்களிப்பிற்காக 28 புகழ்பெற்ற தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களை கௌரவிக்கும் உலகளாவிய அங்கீகாரங்கள் மற்றும் விருதுகள் இந்த உச்சிமாநாட்டில் இடம்பெறும். 28 நாடுகளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஒரு சுயாதீனமான 28 உறுப்பினர் விருதுகள் ஆய்வுக் குழுவால் நடத்தப்படும் கடுமையான சார்பற்ற, தகுதி அடிப்படையிலான மதிப்பீட்டின் மூலம் 84 பரிந்துரைக்கப்பட்ட நபர்களிடமிருந்து அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.


முக்கிய விருது பிரிவுகள்: நீதி விருதுகள்: நீதிபதிகளில் தலைசிறந்த நீதிபதி, மனித உரிமை பாதுகாப்பில் சாதனை, பாலின சமத்துவ சாதனையாளர், உலகத்தின் சிறந்த மகளிர் சட்ட வல்லுநர், சட்டத்தில் சிறந்த பொது சேவை, இலவச சட்ட சேவையில் சிறப்பு, உலகளாவிய புதுமையான சட்ட நடைமுறைகள்.

அன்பு விருதுகள்: உன் அண்டை நாட்டினை நேசி விருது, உன் கிரகத்தை நேசி விருது, உலகின் சிறந்த உயிரினங்கள் நேசிக்குனர் விருது, உலக மாற்றுத்திறனாளி சேவையாளர் விருது, உலகளாவிய சிறந்த வேலைப்புறம் விருது, சர்வதேச ஏழைகளுக்கான உணவளிப்பு விருது, உலகின் மிக மகிழ்ச்சியான நாடு விருது, அமைதி விருதுகள்: உலக அமைதி அமைப்பு விருது, மத நல்லிணக்க பேச்சுவார்த்தை விருது, உலக அமைதி பயணியாளர் விருது, உலக அகிம்சை விருது, அமைதி தொழில்நுட்ப புதுமை விருது, வாழ்வாதார மேம்பாட்டாளர் விருது, ஆழ்ந்த மன்னிப்பு விருது.

இந்த விருதுகள் அரசியல், சட்டம், கல்வி, செயற்பாடு, ஊடகம், சுகாதாரம், தொழில்நுட்பம், விளையாட்டு, திரையுலகம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு வழங்கப்படும்.

# நந்தனம், ஆயிரம்விளக்கு, திருமங்கலம் மெட்ரோ ரெயில் நிலையங்களில் வணிக மேம்பாட்டு திட்ட அறிக்கை தயாரிக்க ஒப்பந்தம்

சென்னை, 08 பிப்ரவரி 2025: சென்னை மெட்ரோ ரெயில் இரண்டாம் கட்ட திட்டத்தில் திருமங்கலம் எம்விஎன் நகர், நந்தனம் மற்றும் ஆயிரம் விளக்கு ஆகிய நிலையங்களில் உள்ள இடங்களில் வணிக மேம்பாட்டிற்கான விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது.




சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், திருமங்கலம் எம்விஎன் நகர், நந்தனம் மற்றும் ஆயிரம் விளக்கு ஆகிய இடங்களில் வணிக வளர்ச்சிக்கான முக்கிய இடங்களைக் கண்டறிந்து பயணச்சீட்டு வருவாயை தவிர்த்து கூடுதல் வருவாயை ஈட்டுவதற்கான முயற்சிகளை திட்டமிட்டுள்ளது.

அந்த ரெயில் நிலையங்களில் வணிக மேம்பாட்டிற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல், சாத்தியக்கூறு ஆய்வு, சந்தை பகுப்பாய்வு, பரிவர்த்தனை ஆலோசனை, கருப்பொருள் திட்டங்கள், நிலப் பயன்பாட்டு அறிக்கை போன்றவற்றை சென்னை பெருநகர வளர்ச்சி ஆணையம், சென்னை மாநகராட்சியிடம் ஒப்புதலுக்காக ஆவணங்களை சமர்ப்பித்தல், செலவு மதிப்பீடு தயாரித்தல் மற்றும் ஒப்பந்த ஆவணங்களைத் தயாரித்தல் போன்ற பணிகளுக்கான ஒப்பந்தம் கையெழுத்தானது.

இறுதி விரிவான திட்ட அறிக்கை இந்த வருடம் மார்ச் மாதத்து-க்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் திட்ட இயக்குநர் தி.அர்ச்சுனன் முன்னிலையில், சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் சார்பாக தலைமை பொது மேலாளர் ரேகா பிரகாஷ், (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு), மற்றும் ஆர்வி அசோசியேட் நிறுவனத்தின் சார்பாக இணை துணைத் தலைவர் ஜே.கே.நந்தனா, அனாராக் நிறுவனத்தின் துணைத் தலைவர் எஸ்.வினோத் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்ச்சியில், சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் மற்றும் ஒப்பந்த தாரர்கள் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# எடப்பாடியை மீண்டும் முதல்வராக்க வீடு தோறும் பிரச்சாரம் - ஜெயலலிதா 77வது பிறந்த நாள்: நலத்திட்ட உதவி, மருத்துவமுகாம், ரத்த தானம், கண் தானம் பா.வளர்மதி தலைமையில் நடந்த மகளிர் அணி கூட்டத்தில் தீர்மானம்

சென்னை, 08 பிப்ரவரி 2025: ஜெயலலிதாவின் 77 வது பிறந்த நாளையொட்டி ஏழைகளுக்கு நலத்திட்ட உதவிகள், அன்னதானம், ரத்த தானம், மருத்துவமுகாம், கவிதை, கட்டுரை விளையாட்டு போட்டிகள் நடத்த மகளிர் அணி செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பா.வளர்மதி தலைமையில் நடந்த மகளிர் அணி ஆலோசனை கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

ஒரு சட்டமன்ற தொகுதிக்கு 50 பேர் வீதம் மகளிர் குழு அமைத்து வீடுவீடாக சென்று மக்களிடம் தீவிர பிரச்சாரம் செய்து மீண்டும் அண்ணா தி.மு.க. ஆட்சி அமைய அயராது உழைக்க சூளுரைக்கப்பட்டது.

அண்ணா தி.மு.க. தலைமை கழகத்தில் பா.வளர்மதி தலைமையில் மகளிர் அணி ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

புரட்சித் தலைவி அம்மாவின் ஆட்சிக் காலங்களில், இந்தியா மட்டுமின்றி உலக நாடுகள் பலவும் வியந்து பாராட்டிய தொட்டில் குழந்தைத் திட்டம், அம்மா உணவகம், மகளிர் தங்கள் வாழ்க்கையில் உயர்ந்திட வேண்டும் என்ற உன்னத நோக்கத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள், மாணவ, மாணவிகளுக்கான நலத் திட்டங்கள், தாலிக்குத் தங்கம் திட்டம், மின்வெட்டால் சீரழிந்திருந்த தமிழ் நாட்டை மீட்டெடுத்து, வீட்டுக்கு 100 யூனிட் இலவச மின்சாரம் என எண்ணிலடங்கா சாதனைகள் நிகழ்த்தப்பட்டன.

இத்தகைய போற்றுதலுக்குரிய அம்மாவின் 77 வது பிறந்த நாளான பிப்ரவரி 24 ந் தேதி அன்று, கழக மகளிர் அணியின் சார்பில், பல்வேறு நிலைகளில் பணியாற்றி வரும் மகளிர் அணி நிர்வாகிகள் அனைவரும் ஒன்றிணைந்து, ஆங்காங்கே ஏழை, எளியோருக்கு அன்னதானம் வழங்குதல், மகளிர் பயன்பெறும் வகையிலான பல்வேறு நலத் திட்ட உதவிகளை வழங்குதல், கண் தானம், இரத்த தானம் செய்தல், மருத்துவ முகாம் நடத்துதல், கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டி, விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல்;

மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் அவர்களுக்கான கல்வி உபகரணங்களை வழங்குதல், இலவசத் திருமணங்களை நடத்தி வைத்தல், ஆதரவற்றோர் இல்லங்கள் மற்றும் முதியோர் இல்லங்களில் வசிப்பவர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல், வேஷ்டி, சேலை வழங்குதல் உட்பட நலத் திட்ட உதவிகளை வழங்கிச் சிறப்பிப்பது என இக்கூட்டம் ஒருமனதாகத் தீர்மானிக்கின்றது. அண்ணா தி.மு.க. மகளிர் அணியின் சார்பில் சர்வதேச மகளிர் தினம்'' ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8 ந் தேதி சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

அந்த வகையில் இந்த ஆண்டும், சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கழக மகளிர் அணியின் சார்பில், கழக அமைப்பு ரீதியாக செயல்பட்டு வரும் அனைத்து மாவட்டங்களிலும் பல்வேறு நலத் திட்ட உதவிகளை வழங்கி, பெண்களுக்கு பெருமை சேர்த்திடும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்திச் சிறப்பிப்பது என இக்கூட்டம் ஒருமனதாகத் தீர்மானிக்கிறது.

மேலூர் மக்களின் போராட்டத்திற்கு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் துணையாக இருந்து, டங்ஸ்டன் ஏல முறையை ரத்து செய்ய வைத்திட்ட, கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடியாருக்கு அவர்களுக்கு, கழக மகளிர் அணியின் சார்பில், தமது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவிக்கிறது.

ஒரு தொகுதிக்கு 50 பேர் வீதம் மகளிர் குழு தமிழகத்தில் தற்போது நடைபெற்று வரும் குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்டிடும் வகையில், கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடியார் வகுத்துத் தரும் தேர்தல் வியூகங்களின்படி களப் பணியாற்றிடும் வகையில், ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு 50 பேர் வீதம் மகளிர் குழுக்களை அமைத்து, ஆங்காங்கே வாழும் மக்களிடையே, இப்பொழுதிருந்தே வீடு வீடாகச் சென்று மகளிரிடையே தீவிர பிரச்சாரம் மேற்கொண்டு, அண்ணா தி.மு.க.வை மீண்டும் ஆட்சிக் கட்டிலில் அமர்த்துவதற்கு அயராது, கண் துஞ்சாது களப் பணி ஆற்றிட இக்கூட்டம் சூளுரை ஏற்கிறது.

பெண்களுக்கு தற்காப்பு கலை நிர்வாகத் திறனற்ற தி.மு.க. ஆட்சியில், பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்திடவும்; பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் கல்வி பயிலும் பெண்களுக்கு தனியாக தற்காப்புக் கலையை கற்றுத் தரவும்; பெண்களைப் பாதுகாக்க பெப்பர் ஸ்பிரே உள்ளிட்ட தற்காப்பு உபகரணங்களை வழங்கவும், பெண்களின் அச்சத்தினைப் போக்க கவுன்சிலிங் வழங்கவும், பெண்களுக்குக் காவலர் செயலி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை, எடப்பாடியாரின் மேலான ஆணையைப் பெற்று, கழக மகளிர் அணி முன்னெடுக்கும் என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

வேடிக்கை பார்க்கும் போலீஸ் தமிழ்நாட்டில் அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலங்களில், சட்டம்-ஒழுங்கைப் பாதுகாப்பதிலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதிலும் சுதந்திரமாக செயல்பட்டு வந்த காவல் துறை, திமுக ஆட்சியில் தனது சுய முகவரியை இழந்து, ஆளுங்கட்சியின் கைப்பாவையாக மாறி, சமூக விரோதிகள் மீது நடவடிக்கை எடுக்காமல், கைகட்டி வேடிக்கை பார்த்து வரும் அவல நிலை மிகவும் வெட்கக்கேடானது.

திமுக அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, தமிழகத்தில் நடைபெறுவது சட்டத்தின் ஆட்சியா? சட்டவிரோத ஆட்சியா? என்று தெரியாமல் மக்கள் விழிபிதுங்கி நிற்கின்றனர். கடந்த 44 மாதகால திமுக ஆட்சியில், சட்டத்தைக் காக்கக்கூடிய காவலர்களின் கைகளை விட, சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவோரின் கைகளே ஓங்கி இருக்கின்றன என்பது பல்வேறு கொடுஞ்சம்பவங்கள் மூலம் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

பல ஆண்டுகளுக்குப் பிறகு கள்ளச் சாராய மரணங்கள்; குண்டு வெடிப்பு, அன்றாடம் நடைபெறும் கொலை, கொள்ளை, வழிப்பறி, பாலியல் வன்கொடுமை ஆகியவற்றுடன் தலைவிரித்தாடும் போதைக் கலாச்சாரம் என்று நாள்தோறும் பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும் சட்டம்-ஒழுங்கு சீர்கேடு சம்பந்தமான செய்திகள் வெளிவந்த வண்ணம் உள்ளன.

போலீசுக்கே பாதுகாப்பு இல்லை

முதலமைச்சர் ஸ்டாலின் ஆட்சியில் காவல் துறையின் கைகளும், கண்களும் கட்டப்பட்டுள்ளது. தற்போதுள்ள ஆட்சியாளர்களால் தங்களுக்கு எந்த பாதிப்பும் வராது என்ற இறுமாப்போடும், துணிச்சலோடும் சமூக விரோத சக்திகள் ஆட்டம் போடுகின்றன. மக்களுக்கும் பாதுகாப்பில்லை; காவல் துறைக்கும் பாதுகாப்பில்லை என்ற நிலையில், தமிழக ஆட்சிச் சக்கரம் நிலைகுலைந்து போயுள்ளது. ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. ஆட்சியை அகற்றும் வரை, கழக மகளிர் அணி நிர்வாகிகளும், மகளிர் அணியினரும் கண் துஞ்சாமல் கடமை ஆற்றுவது என இக்கூட்டம் ஒருமனதாக தீர்மானிக்கிறது.

வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. குறிப்பாக, நீட் தேர்வு ரத்து, கல்விக் கடன் ரத்து, மாதம் ஒருமுறை மின் கணக்கெடுப்பு முறை, பெட்ரோல், டீசல் விலை குறைப்பு, சமையல் எரிவாயு சிலிண்டருக்கு 100 - ரூபாய் மானியம் இப்படி, 520-க்கும் மேற்பட்ட வாக்குறுதிகளை மக்களுக்கு அளித்துவிட்டு, பல்வேறு வாக்குறுதிகளை நிறைவேற்றாமல், 90 சதவீத வாக்குறுதிகளை நிறைவேற்றி விட்டோம் என்று பொய் சொல்லியே காலத்தைக் கடத்தி வந்த நிலையில், தி.மு.க. அரசின் பதவிக் காலமே முடியப்போகிறது. இப்படி வாய்ச் சொல் வீரர்களாக வலம் வரும் திமுக ஆட்சியாளர்களுக்கு தமிழக மக்கள் 2026, சட்டமன்றப் பொதுத் தேர்தலில் தக்க பாடம் புகட்டுவார்கள். தி.மு.க.வின் இத்தகைய ஏமாற்று வேலைக்கு, கழக மகளிர் அணி தமது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. 2026-ல் நடைபெற உள்ள சட்டமன்றப் பொதுத் தேர்தலையொட்டி, 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் பட்டி தொட்டி எங்கும் வாழும் மக்களிடையே, தி.மு.க. ஆட்சியில் நடைபெற்று வரும் பல்வேறு மக்கள் விரோதச் செயல்களையும்; சட்டம்-ஒழுங்கு சீர்கேடுகளையும், திண்ணைப் பிரச்சாரம், தெருமுனைப் பிரச்சாரம், துண்டுப் பிரசுரங்கள் உள்ளிட்டவை மூலம் எடுத்துக் கூறுவதோடு; எம்.ஜி.ஆர்., அம்மா ஆகிய நம் இருபெரும் தலைவர்கள் வழியில் புரட்சித் தமிழர்' அண்ணன் எடப்பாடியார் தலைமையிலான கழக ஆட்சிக் காலங்களில், மக்கள் நலன் ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுத்தப் பட்ட பல்வேறு முத்தான திட்டங்களையும், மக்கள் அனைத்து வகைகளிலும் நிம்மதியாக வாழ்ந்து வந்ததையும் எடுத்துக் கூறி, அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர், எடப்பாடியாரைத் தமிழ் நாட்டின் முதலமைச்சராக, அரியணையில் அமர்த்துவதற்கு அரும்பாடுபடுவோம் என்று கழக மகளிர் அணி வீரசபதம் ஏற்கிறது ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்த கூட்டத்துக்கு முன்னாள் அமைச்சர் பா.வளர்மதி தலைமை வகித்தார். அமைப்பு செயலாளர் எஸ்.கோகுல இந்திரா, மகளிர் அணி இணைச் செயலாளர் கீர்த்திகா முனியசாமி, கொள்கை பரப்பு இணைச் செயலாளர் விந்தியா, முன்னாள் அமைச்சர் வி.சரோஜா, முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் கணிதா சம்பத், ஏ.எஸ். மகேஸ்வரி, முன்னாள் அமைச்சர் வி.எம்.ராஜலெட்சுமி, முன்னாள் எம்.எல்.ஏ. எம்.சந்திரபிரபா, ஏ.நூர்ஜஹான், கிருஷ்ணா ராதாகிருஷ்ணன், பரமேஸ்வரி முருகன், கண்ணகி பாஸ்கரன், காயத்ரி ரகுராம், கே.சகுந்தலா, கஸ்தூரி வாசு, கு.சித்ரா, நிர்மலா பெரியசாமி, கே.சிவசங்கரி, அ.சசிரேகா, அப்சரா ரெட்டி, எம்.ஜெமிலா உட்பட பலர் கலந்து கொண்டனர்.